# கனிஷ்ட இடைநிலைமட்ட விஞ்ஞான ஆசிரியர்களிடையே விஞ்ஞான செயன்முறைத்திறன்கள் பற்றிய புலக்காட்சி


**ஆய்வுச்சுருக்கம்**

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிடையே விஞ்ஞான செயன்முறைத்திறன்கள் தொடர்பான புலக்காட்சி பற்றிய இந்த ஆய்வானது, படை கொண்ட எழுமாற்று மாதிரி முறை மூலம் தெரிவு செய்யப் பட்ட 212 ஆசிரியர்களிடமிருந்து வினாக் கொத்துகளுக் கூடாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு மேற் கொள்ளப்பட்டது. தரவுப் பகுப்பாய்வினூடாக இனங்காணப்பட்ட 40 ஆசிரியர்கள் அரை அமைப்பாக்கம் செய்யப்பட்ட நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களது வகுப்பறைச் செயற்பாடுகளும் அவதானிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் பால், வயது, கற்பித்தல் அனுபவம், பாடசாலை வகை ஆகியவற்றின் அடிப்படையில் $x2$ சோதனை, சராசரிப்பெறுமானம் கணித்தல் ஆகிய புள்ளிவிபரவியற் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன. விஞ்ஞான செயன்முறைத்திறன்கள் பற்றிய தெளிவு, ஆய்வுகூட செயற்பாடுகளைத் திட்டமிடல், விஞ்ஞானம் கற்றல் கற்பித்தலில் நவீன கோட்பாடுகள் பற்றிய அறிவு, விஞ்ஞான செயன்முறைத் திறன்களின் பயன்பாடுகள் பற்றிய தெளிவான விளக்கம் போன்ற காரணிகள் விஞ்ஞான செயன்முறைத்திறன்களின் விருத்தியில் செல்வாக்கு செலுத்துவதாக ஆய்வின் பெறுபேறுகள் வெளிக்கொணர்ந்துள்ளன. ஆயினும், செயன்முறைத் திறன்கள் தொடர்பாக முறையான அறிவும் தெளிவும் விஞ்ஞான ஆசிரியர்களிடத்தே இல்லை என்பதனையே ஆய்வின் கண்டறிதலாகக் கொள்ள முடியும்.



**திறவுச் சொற்கள்**- விஞ்ஞான செயன்முறைத்திறன்கள், ஆசிரியர்களது புலக்காட்சி,